ந.க.எண்.4392/2024/ஆ2, மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
நாள். 28 .05.2024 செங்கல்பட்டு

## தடையின்மைச்சான்று

பொருள் தடையின்மைச் சான்று – செங்கல்பட்டு மாவட்டம் – செங்கல்பட்டு வட்டம் – ஆத்தூர் "அ" கிராமம் – புல எண் 84/4A மற்றும் சில – விஸ்தீரணம் 19.99 ஏக்கர் – நன்செய் நிலத்தினை வீட்டுமனைப்பிரிவாக மாற்ற தடையின்மைச் சான்று வழங்கக் கோரி – தி/எ்.வாசவி ரியால்டர்ஸ் நிறுவனத்தின் பங்குதாரர் திரு.மு.ஜெயக்குமார் மனு அளித்துள்ளது – தடையின்மைச் சான்று வழங்குதல் – தொடர்பாக.

பார்வை
1. தி/எ்.வாசவி ரியால்டர்ஸ் என்ற நிறுவனத்தின் பங்குதாரர் திரு.ஜெயக்குமார் என்பவர் மனு நாள்.5.5.2021.
2. இவ்வலுவலக கடித ந.க.எண்.6617/2021/ஆ2, நாள்.12.5.2021.
3. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வே), /வேளாண்மை துணை இயக்குநர்(பொ), செங்கல்பட்டு அறிக்கை ந.க.எண்.23(149) /2021/(வே), நாள்.09.07.2021
4. காட்டாங்கொளத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) அறிக்கை ந.க.எண்.1506/2022/அ2,நாள்.20.05.2022.
5. உதவி இயக்குநர்,மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அறிக்கைஒ.மு.எண்.299/2022/செ.மா.3,நாள்.20.06.2022
6. சார் ஆட்சியர் அறிக்கை ந.க.எண்.471/2022/அ1, நாள். 17.08.2022.
7. தி/எ்.வாசவி ரியால்டர்ஸ் என்ற நிறுவனத்தின் பங்குதாரர் திரு.ஜெயக்குமார் என்பவர் மனு நாள்.6.5.2024.
8. செயற்பொறியாளர், நீ.வ.து,கீழ்பாலாறு வடிநிலக்கோட்டம் காஞ்சிபுரம் அறிக்கை ந.க.எண்.4/கோ.28(NOC–ஆத்தூர்)/2023/நாள்.24.05.2024
9. சம்மந்தப்பட்ட ஆவணங்கள்.

--------

செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் வட்டம், ஆத்தூர் "அ" கிராமம், புல எண்.84/4பி மற்றும் சில புலங்களின் மொத்த விஸ்தீரணம் 19.99 ஏக்கர் நன்செய் நிலத்தில் வீட்டுமனைப்பிரிவாக மாற்ற தடையின்மைச் சான்று வழங்கக் கோரி தி/எ்.வாசவி ரியால்டர்ஸ் என்ற நிறுவனத்தின் பங்குதாரர் திரு.ஜெயக்குமார் என்பவர் மனு

TRUE COPY
NOTARY PUBLIC K.S. SHANMUGAM CITY OF CHENNAI Go. Ms. No.143/2023 GOVT. OF TAMILNADU, INDIA

அளித்துள்ளது தொடர்பாக சார்நிலை அலுவலர்களின் அறிக்கைகள் பெறப்பட்டுள்ளதில் பின்வரும் விவரங்கள் தெரியவருகிறது.

மேற்படி மனுதாரர் தடையின்மைச் சான்று வழங்கக் கோரி மனு செய்த புல எண்கள் செங்கல்பட்டு வட்டம், ஆத்தூர் "அ" கிராம தற்போதைய கணிணி 'அ' பதிவேட்டின்படி கீழ்கண்டவாறு தாக்கலாகியுள்ளது.

| வ. எண் | புல எண் | பரப்பு | வகைபாடு | பட்டா எண் | பட்டாதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | 378/1B | 0.08.50 | நன்செய் | 8552 | மு.ஜெயக்குமார் |
| 2 | 378/2 | 0.12.50 | நன்செய் | 8552 | மு.ஜெயக்குமார் |
| 3 | 378/3 | 0.36.50 | நன்செய் | 8552 | மு.ஜெயக்குமார் |
| 4 | 379/2 | 0.06.00 | நன்செய் | 8552 | மு.ஜெயக்குமார் |
| 5 | 380/1B2 | 0.11.00 | நன்செய் | 8552 | மு.ஜெயக்குமார் |
| 6 | 380/2B2 | 0.13.00 | நன்செய் | 8552 | மு.ஜெயக்குமார் |
| 7 | 123/1A2 | 0.06.07 | நன்செய் | 8552 | மு.ஜெயக்குமார் |
| 8 | 125/1A | 0.16.00 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 9 | 125/2 | 0.14.00 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 10 | 125/3A | 0.21.00 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 11 | 125/3B | 0.18.50 | நன்செய் | 8552 | மு.ஜெயக்குமார் |
| 12 | 125/3C | 0.18.50 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 13 | 125/3D | 0.18.50 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 14 | 145/2 | 0.34.50 | நன்செய் | 8552 | மு.ஜெயக்குமார் |
| 15 | 146 | 0.54.00 | நன்செய் | 8552 | மு.ஜெயக்குமார் |
| 16 | 126/3A | 0.56.50 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 17 | 126/3B | 0.02.00 | நன்செய் | 8552 | மு.ஜெயக்குமார் |
| 18 | 128 | 0.40.00 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 19 | 129/1B | 0.07.00 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 20 | 129/1C1 | 0.07.00 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 21 | 129/1C2 | 0.08.00 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 22 | 129/2 | 0.20.00 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 23 | 129/3B | 0.11.50 | நன்றசெய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 24 | 129/4 | 0.22.00 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 25 | 130/1 | 0.13.50 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |

TRUE COPY
NOTARY PUBLIC
K.S. SHANMUGAM
CITY OF CHENNAI
Go. Ms.
No.143/2023
GOVT. OF TAMILNADU, INDIA

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 26 | 131 | 0.41.50 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 27 | 84/4A | 0.43.50 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 28 | 84/4B | 0.02.00 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 29 | 84/5A | 0.13.50 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 30 | 84/5B | 0.11.50 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 31 | 84/5C | 0.11.50 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 32 | 86/1 | 0.27.00 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 33 | 86/2 | 0.27.50 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 34 | 88/1 | 0.10.50 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 35 | 88/2 | 0.08.50 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 36 | 132/1 | 0.39.00 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 37 | 132/2A | 0.07.50 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 38 | 132/2B | 0.25.00 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 39 | 132/2C | 0.43.50 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 40 | 132/3 | 0.12.50 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| 41 | 133/2 | 0.08.50 | நன்செய் | 8560 | வாசவி ரியால்டர்ஸ் |
| மொத்தம் | | 8.09.07 ஹெக்டேர்ஸ் | | | |

<u>பொதுவான நிபந்தனைகள்</u>

| | |
|---|---|
| 1 | மனுதாரர் தடையின்மைச் சான்று கோரும் புலத்தின் உயரம் பொதுப்பணித்துறையின் நிபந்தனைகளின்படி உயரத்தை அமைத்திட வேண்டும். |
| 2 | மனுதாரர் தனது சொந்த இடத்திலேயே போதிய வடிகால் வசதிகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் பிரஸ்தாப் புலம் தாழ்வாக இருக்கும்பட்சத்தில் அதனை நீர் சூழாதவாறு அமைத்துக் கொள்ள வேண்டும் |
| 3 | மனுதாரரால் முன்மொழியப்பட்ட கட்டுமானத்தை மாற்றுவதற்கு முன்பு சம்மந்தப்பட்ட பொதுப்பணித்துறை மற்றும் நீர்வள ஆதாரத்துறைக்கு முன்னரே அறிவிப்பு வழங்க வேண்டும். |
| 4 | இப்புலங்களில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்படும் குப்பைகள் இடிபாட்டுப் பொருட்களை பொது இடங்களில் கொட்டாமல் சொந்த இடத்திலேயே சேகரித்து முறையாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளின்படி வெளியேற்றப்பட வேண்டும். |

TRUE COPY
NOTARY PUBLIC
K.S. SHANMUGAM
CITY OF CHENNAI
Go. Ms.
No.143/2023
GOVT. OF TAMILNADU, INDIA

| | |
|---|---|
| 5 | இப்புலத்தில் அங்கீகரிக்கப்பட்ட பொறியாளரிடமிருந்து பெறப்பட்ட வடிவமைப்பின்படி முறையாக மண் பரிசோதனை செய்து மண்ணின் தன்மைக்கேற்ப பொருத்தமான அடித்தளத்தினை அமைத்து கட்டடம் கட்டப்பட வேண்டும். |
| 6 | மனுதாரரின் இப்புலங்களில் அமைக்கப்படவுள்ள கட்டிடங்களிலிருந்து வெளியேறும் கழிவு நீரை அருகில் உள்ள மழைநீர் சேகரிப்பு தொட்டி மற்றும் ஓடையில் கலக்காதவாறும் சம்மந்தப்பட்ட தகுதி வாய்ந்த அதிகாரிகளிடம் முறையான வழிமுறைகளைப் பெற்று நிறுவனத்தாரின் நிலத்திலேயே தனது சொந்த செலவில் கழிவு நீர் உட்கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டும். |
| 7 | மனுதாரர் தடையின்மை சான்று கோரியுள்ள புலங்களில் வருவாய்துறை மற்றும் பொதுப்பணித்துறை ஆவணங்களில் உள்ள அளவுகளின் படி வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள வேண்டும். அருகில் அரசு புறம்போக்கு கால்வாய் / ஓடை ஏதேனும் இருப்பின் அவற்றை ஆக்கிரமித்தல் கூடாது. |
| 8 | மனுதாரர் தடையின்மைச் சான்று கோரும் புலம் கால்வாய், ஏரி போன்ற நீர்நிலைகளை ஒட்டி அமையும் பட்சத்தில் மனுதாரர் தனது சொந்த செலவில், அவருடைய சொந்த இடத்தில் சுவர் எழுப்ப வேண்டும். இப்புலத்தினை அதிகாரிகள் அவ்வப்போது ஆய்வு செய்ய வரும்போது தடையேதும் ஏற்படுத்துதல் கூடாது. |
| 9 | மனுதாரர் தடையின்மைச் கோரும் சான்று கோரும் புலங்களுக்கு அருகில் பொதுப்பணித்துறை ஏரிகள் இருப்பின் கட்டட பணிகள் மேற்கொள்ளும் போது அவற்றிற்கு எவ்வித சேதமும் ஏற்படுத்திவிடக் கூடாது. பொதுப்பணித்துறை கால்வாயினை கடந்து பணிகளை மேற்கொள்ளும் போது அத்துறையின் அனுமதி பெறப்பட வேண்டும் |
| 10 | மனுதாரர் தடையின்மை சான்று கோரும் புலங்களுக்கு இடையே இருக்கும் கால்வாய்களை தனது சொந்த செலவில் பராமரிக்க வேண்டும். வருவாய்த் துறை பதிவேடுகளின்படி எந்த ஓர் ஆக்கிரமிப்புகளும் இல்லாமல் கால்வாய்களின் அகலத்தை பராமரிக்க வேண்டும். பிரஸ்தாப புலத்திற்குள் இருக்கும் கால்வாய்களின் வழியாக நீர் செல்வதற்கு எவ்வித தடையும் ஏற்படாவண்ணம் தேவையான ஏற்பாடுகளை கட்டுமான வேலைகள் முடிந்த பின்னரும் தனது சொந்த செலவில் செய்தல் வேண்டும். |
| 11 | தற்போதுள்ள அரசு விதிமுறைகளின்படி சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் முன் அனுமதி பெற்று ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் ஆழ்துளை கிணறுகள் விவசாய நீர் ஆதார நீர்நிலைகளை பாதிக்கப்படாதவாறு அமைக்கப்பட வேண்டும். |
| 12 | கடும் வெள்ள காலங்களில் மழைநீர் பிரஸ்தாப புலத்தில் தேங்காதவாறு அதனை வெளியேற்றும் வகையில் தடையின்மைச் சான்று கோரும் புலத்தினைச் சுற்றி உறுதியான கல்வெட்டுகள் மற்றும் கால்வாய்கள் அமைத்து மழைநீரை வெளியேற்ற வேண்டும். |

TRUE COPY
NOTARY PUBLIC
K.S. SHANMUGAM
CITY OF CHENNAI
Go. Ms.
No.143/2023
GOVT. OF TAMILNADU, INDIA

| | |
|---|---|
| 13 | மனுதாரருக்கு வழங்கப்பட்ட அனுமதியை வேறு முழுமையாகவோ மாற்ற எவருக்கும் பகுதியாகவே கிடையாது. எதிர்காலத்தில் இந்த தடையிமைச்சான்று பெற தங்களால் முன்னிலைப்படுத்தப்பட்ட ஆவணங்கள் போலியானவை என கண்டறியப்பட்டால், எவ்வித அறிவிப்பும் இன்றி தடையின்மைச் சான்று ரத்து செய்யப்படும். |
| 14 | இத்தடையின்மைச் சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள புலங்களில் எவையேனும் நில எடுப்பு தமிழ்நாடு நில உச்சவரம்பு நிலசீர்திருத்தம் ஆகிய சட்ட விதிமுறைகளுக்கு உட்படுமாயின் இத்தடைமின்மைச் அதற்கு உட்பட்டதாகும். |
| 15 | மேற்படி நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் இத்தடையின்மைச் சான்றினை எப்பொழுது வேண்டுமானாலும் இரத்து செய்ய மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அதிகாரம் உண்டு. |
| 16 | இத்தடையின்மை சான்று கோரும் புலங்களில் பின்வரும் காலங்களில் நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவை இருக்கும் பட்சத்தில், நீதிமன்றத்தினால் அவ்வழக்கிற்கு அளிக்கப்படும் தீர்ப்பிற்கு இத்தடையிமைச்சான்று உட்பட்டதாகும். |

<u>மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக நிபந்தனைகள்</u>

| | |
|---|---|
| 1 | ஏரி. புறம்போக்கு, பாசன வாய்க்கால்களை ஆக்கிரமிப்புகள் செய்தல் கூடாது |
| 2 | அருகாமையில் உள்ள நீர் நிலைகளில் Sanitary / Waste Water Disposals போன்றவைகளால் மாசுபடுத்துதல் கூடாது. |
| 3 | உத்தேச இடத்தில் பிற உபயோகங்களுக்கு அபிவிருத்தி செய்யும் முன்னர் இத்துறையின் முன் அனுமதி பெற வேண்டும். |

<u>கீழ்பாலாறு வடிநில கோட்டம், நீர்வள ஆதாரத்துறையின் நிபந்தனைகள்</u>

1. மனுதாரர் தி/எ்.வாசவி ரியால்டர்ஸ் நிறுவனத்தின் சார்பாக திரு.ஜெயக்குமார், நுங்கம்பாக்கம், சென்னை–34 அவர்களுக்கு சொந்தமான செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், ஆத்தூர் 'அ' கிராமம், நன்செய் புல எண். 84/4ஏ மற்றும் சிலவற்றின் மொத்த விஸ்தீரணம் 19.71 ஏக்கர் நிலத்தினை குடியிருப்பு பகுதியாக மாற்றிக் கொள்வதற்கு உரிய நிலவகைபாடு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

2. மனுதாரருக்கு சொந்தமான புல எண் நிலங்களில் வெள்ள நீர் பாதிப்பு ஏற்படாமலிருக்க பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரரின் புல எண் நிலங்களின் மட்ட அளவுகள் படிப்படியாக ஒரே சீராக உயர்த்தப்பட வேண்டும்.

TRUE COPY

NOTARY PUBLIC
K.S. SHANMUGAM
CITY OF CHENNAI
Go. Ms.
No.143/2023
GOVT. OF TAMILNADU, INDIA

| வ. எண் | நில புல எண் | வகைபாடு | பரப்பளவு (ஹெக்டேரில்) | இயற்கையான மட்ட அளவு (மீ) | மண் கொட்டி உயர்த்தப்பட வேண்டிய மட்ட அளவு (மீ) | மனுதாரரின் புல எண் நிலங்களில் மண் கொட்டி உயர்த்தப்பட வேண்டிய உயரம் (மீட்டரில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 378/1B | நன்செய் | 0.08.50 | (+)38.280 | (+)39.140 | 0.86 |
| 2 | 378/2 | நன்செய் | 0.12.50 | | | |
| 3 | 378/3 | நன்செய் | 0.36.50 | | | |
| 4 | 379/2 | நன்செய் | 0.06.00 | (+)38.240 | (+)39.140 | 0.90 |
| 5 | 380/1B | நன்செய் | 0.11.00 | (+)38.210 | (+)39.140 | 0.93 |
| 6 | 380/2B2 | நன்செய் | 0.13.00 | | | |
| 7 | 123/1A2 | நன்செய் | 0.06.07 | (+)38.150 | (+)39.140 | 0.99 |
| 8 | 125/1A | நன்செய் | 0.16.00 | (+)37.960 | (+)38.900 | 0.94 |
| 9 | 125/2 | நன்செய் | 0.14.00 | (+)37.920 | (+)38.900 | 0.98 |
| 10 | 125/3A | நன்செய் | 0.21.00 | | | |
| 11 | 125/3B | நன்செய் | 0.18.50 | | | |
| 12 | 125/3C | நன்செய் | 0.18.50 | | | |
| 13 | 125/3D | நன்செய் | 0.18.50 | | | |
| 14 | 145/2 | நன்செய் | 0.34.50 | (+)38.020 | (+)38.900 | 0.88 |
| 15 | 146 | நன்செய் | 0.54.00 | (+)38.060 | (+)38.900 | 0.84 |
| 16 | 126/3A | நன்செய் | 0.56.50 | (+)37.950 | (+)38.900 | 0.95 |
| 17 | 126/3B | நன்செய் | 0.02.00 | | | |
| 18 | 128 | நன்செய் | 0.40.00 | (+)37.820 | (+)38.800 | 0.98 |
| 19 | 129/1B | நன்செய் | 0.07.00 | (+)37.900 | (+)38.900 | 1.00 |
| 20 | 129/1C1 | நன்செய் | 0.07.00 | | | |
| 21 | 129/1C2 | நன்செய் | 0.08.00 | | | |
| 22 | 129/2 | நன்செய் | 0.20.00 | | | |
| 23 | 129/3B | நன்செய் | 0.11.50 | | | |
| 24 | 129/4 | நன்செய் | 0.22.00 | | | |
| 25 | 130/1 | நன்செய் | 0.13.50 | (+)37.020 | (+)38.500 | 1.48 |
| 26 | 131 | நன்செய் | 0.41.50 | (+)37.220 | (+)38.500 | 1.28 |
| 27 | 84/4A | நன்செய் | 0.43.50 | (+)37.160 | (+)38.500 | 1.34 |
| 28 | 84/4B | நன்செய் | 0.02.00 | | | |
| 29 | 84/5A | நன்செய் | 0.13.50 | | | |
| 30 | 84/5B | நன்செய் | 0.11.50 | | | |
| 31 | 84/5C | நன்செய் | 0.11.50 | | | |
| 32 | 86/1 | நன்செய் | 0.27.00 | (+)37.280 | (+)38.500 | 1.22 |
| 33 | 86/2 | நன்செய் | 0.27.50 | | | |
| 34 | 88/1 | நன்செய் | 0.10.50 | (+)37.280 | (+)38.500 | 1.22 |

TRUE COPY
NOTARY PUBLIC
K.S. SHANMUGAM
CITY OF CHENNAI
Go. Ms. No.143/2023
GOVT. OF TAMILNADU, INDIA

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 35 | 88/2 | நன்செய் | 0.08.50 | | | |
| 36 | 132/1 | நன்செய் | 0.39.00 | (+)37.030 | (+)38.500 | 1.47 |
| 37 | 132/2A | நன்செய் | 0.07.50 | | | |
| 38 | 132/2B | நன்செய் | 0.25.00 | | | |
| 39 | 132/2C | நன்செய் | 0.43.50 | | | |
| 40 | 132/3 | நன்செய் | 0.12.50 | | | |
| 41 | 133/2 | நன்செய் | 0.08.50 | (+)37.220 | (+)38.500 | 1.28 |
| | மொத்தம் | | 08.09.07 ஹெக்டேர்ஸ் | | | |

| | |
|---|---|
| 3 | மனுதாரர் மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள உயரத்திற்கு முறையான மண் பரிசோதனை (Soil Test) செய்த மண்ணை கொண்டு நிரப்பப்பட வேண்டும் |
| 4 | மனுதாரரின் நிலப்பகுதியில் கிடைக்கப்பெறும் மழைநீர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதியிலிருந்து கிடைக்கப்பெறும் மழைநீரினை வெளியேற்றிட மனுதாரரின் நிலப்பரப்பினைச் சுற்றி அனைத்துப் பகுதிகளிலும் 3.00 மீ x 1.50 மீ (உள் அளவு) என்ற அளவில் மழைநீர் வடிகால்வாய் மனுதாரரின் சொந்த செலவில் அமைத்துப் பராமரிக்கப்பட வேண்டும். |
| 5 | மனுதாரரின் புல எண்களான 378/1B, 378/2, 378/3, 380/1B மற்றும் 380/2B ஆகிய புல எண்கள் ஒரு பகுதியாகவும், மற்ற புல எண்கள் மற்றொரு பகுதியாகவும் தொடர்பில்லாமல் தனித்து அமைந்துள்ளது. மேலும், மேற்கண்ட புல எண்களுக்கு அணுகு பாதை தனித்தனியாக உள்ளது. |
| 6 | மனுதாரரின் புல எண்கள். 84/4A & 132/2A-ன் வடக்கு பகுதியினை ஒட்டி நீஞ்சல் மடுவு ஆறு செல்கிறது என வருவாய்த்துறை ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது. மனுதாரரின் புல எண் நிலங்களை குடியிருப்புப் பகுதியாக மாற்றம் செய்யப்படும்பொழுது. நீஞ்சல் மடுவு ஆற்றின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஏதுவாக 15.00 மீ பக்க இடைவெளி (Set Back) நீஞ்சல் மடுவினை ஒட்டிய மனுதாரரின் புல எண் நிலத்தில் விடப்பட வேண்டும். இந்த இடைவெளி நிலப்பகுதியில் வேறு எவ்விதமான கட்டுமானங்களும் மேற்கொள்ளக்கூடாது. |
| 7 | மனுதாரரின் புல எண்கள் 84/4A & 132/2/A-ன் வடக்கு பகுதியினை ஒட்டி செல்லும் நீஞ்சல் மடுவின் எல்லைகளை வருவாய்த் துறையின் அளவையர்கள் மூலம் அளவீடு செய்து, எல்லைக் கற்கள் நடப்பட்டு எவ்வித ஆக்கிரமிப்பும் இன்றி அரசு ஆவணங்களில் உள்ள அளவுகளின்படி பராமரிக்கப்பட வேண்டும். எதிர்வரும் காலங்களில் இவ்விடத்தில் ஆக்கிரமிப்பு எதும் செய்யப்பட்டுள்ளது என தெரியவரும் பட்சத்தில், தடையின்மை சான்று வழங்க பரிந்துரை செய்யப்படும் இந்த தொழில்நுட்ப அறிக்கை இரத்து செய்யப்படும். இதற்கான இழப்பீட்டிற்கு நீர்வளத்துறை எவ்விதத்திலும் பொறுப்பேற்காது. |

TRUE COPY
NOTARY PUBLIC
K.S. SHANMUGAM
CITY OF CHENNAI
Go. Ms.
No.143/2023
GOVT. OF TAMILNADU, INDIA

| | |
|---|---|
| 8 | மனுதாரரின் புல எண் நிலங்களுக்கிடையே நிலவியல் பட்டா பாசன கால்வாய்கள் செல்வதாக ஆத்தூர் கிராம வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பாசன கால்வாய்கள் அரசு புறம்போக்கு வாய்க்கால்களாக இல்லாத போதிலும். மனுதாரரின் நிலங்களுக்கு கீழ் மற்றும் அருகாமையில் உள்ள நிலங்களுக்கு விவசாய பணிகள் மேற்கொள்ள தண்ணீர் செல்லும் வகையில் பாசன கால்வாய்களாக தொடர்ந்து அதன் தன்மை மாறாமல் பராமரிக்கப்பட வேண்டும். |
| 9 | மனுதாரரின் புல எண்கள்.125/2, 125/3D, 126/3A, 145/2 & 146-ன் ஊடே உயர் மின்னழுத்த வடகம்பி (High Tension Power line) செல்வதாக ஆத்தூர் கிராம வரைபடம் மற்றும் புல வரைபடத்தில் தெரியவருகிறது. எனவே, உயர் மின்னழுத்த வழித்தடத்தினால் மின்சார பாதிப்பு ஏதும் ஏற்படாமல் இருக்க உரிய ஏற்பாடுகளை மனுதாரரே செய்து கொள்ளப்பட வேண்டும். இது குறித்து எதிர்காலத்தில் பாதிப்பு ஏதேனும் ஏற்பட்டால் அதற்கு நீர்வளத்துறை எவ்விதத்திலும் பொறுப்பேற்காது. மேலும், உரிய துறையிடமிருந்து அனுமதி பெறப்பட வேண்டும். |
| 10 | மனுதாரரின் புல எண் நிலங்களுக்கு அருகில் அரசு புறம்போக்கு நிலங்களான நத்தம், சாலை, வாய்க்கால், ஆதி திராவிடர் குடியிருப்பு மற்றும் கோவில் போன்ற வகைபாடு கொண்ட நிலங்கள் உள்ளதாக வருவாய்த்துறையின் ஆவணங்களின்படி தெரியவருகிறது. எனவே, இந்த அரசு புறம்போக்கு நிலங்களில் மனுதாரரால் எவ்வித ஆக்கிரமிப்பும் மேற்கொள்ளக்கூடாது. |
| 11 | மனுதாரரின் புல எண் நிலங்களில் குடியிருப்பு பகுதியாக மாற்றி பயன்படுத்தும்பொழுது வெளியேறும் கழிவு நீரை பாசன கால்வாயிலோ, அருகிலுள்ள சாலையோர கால்வாயிலோ அல்லது அருகிலுள்ள நிலங்களிலோ விடக்கூடாது. மனுதாரரின் நிலத்திலேயே அவரது சொந்த செலவில் கழிவுநீர் உட்கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டும். மேலும், கழிவுநீர், மழைநீர் கால்வாயில் சென்றடையாத வண்ணம் அப்பகுதி உள்ளாட்சி அமைப்பின் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும். |
| 12 | மனுதாரரின் புல எண்களில் அமைக்கப்பட உள்ள கட்டிடங்களில் விழும் மழை நீரை சேமிக்க மழைநீர் சேகரிக்கும் கட்டமைப்பு வசதி மனுதாரரின் சொந்த செலவிலேயே அமைக்கப்பட வேண்டும். |
| 13 | மனுதாரர் பிறர் நிலங்களுக்கு பாசன நீர் செல்வதை எவ்விதத்திலும் தடை செய்ய கூடாது. மேலும், கீழே உள்ள விளைநிலங்களுக்கு பாசன நீர் செல்வதற்காக மேற்கு திசை மழைநீர் வடிகால்வாயினை பயன்படுத்தி உரிய வழிவகை மனுதாரரால் ஏற்படுத்தி தரப்பட வேண்டும். |
| 14 | மனுதாரருக்கு சொந்தமான புல எண் நிலங்களுக்கு இடையே பிறருக்கு சொந்தமான விவசாய நிலங்கள் இருப்பதால், அவர்களின் விளை நிலங்களுக்கு விவசாய பணி மேற்கொள்ளவும், விவசாய இடு பொருட்களை எடுத்துச் செல்லவும், நிலங்களை பார்வையிட சென்று வருவதற்கும் மனுதாரர் தடை ஏதும் செய்யக்கூடாது. |

TRUE COPY

NOTARY PUBLIC
K.S. SHANMUGAM
CITY OF CHENNAI
Go. Ms.
No.143/2023
GOVT. OF TAMILNADU, INDIA

| | |
|---|---|
| 15 | மனுதாரரின் நிலங்களில் வருவாய் துறையின் மூலம் நில அளவை செய்து நீர்வளத்துறையின் அலுவலர்கள் முன்னிலையில் எல்லைக் கற்கள் பதித்து பராமரிக்கப்பட வேண்டும். |
| 16 | மனுதாரர் அளித்துள்ள நில விவர ஆவணங்களின்படி இத்துறையின் தள அலுவலர்களால் ஆய்வு செய்து, அதனடிப்படையில் இந்த தொழில்நுட்ப அறிக்கை பரிந்துரை செய்யப்படுகிறது. மனுதாரரால் அளிக்கப்பட்ட ஆவணங்களின் உண்மை தன்மைக்கு மனுதாரரே முழு பொறுப்பு ஆவார். |
| 17 | எதிர்வரும் காலங்களில் மனுதாரரின் நிலத்தினை நீர்வளத்துறை அலுவலர்கள் ஆய்வு செய்திடும் பொழுது எப்பொழுதும் எவ்விதத்திலும் தடை ஏற்படுத்த கூடாது. |
| 18 | மனுதாரரின் நிலங்களில் குடியிருப்பு பகுதியாக மாற்றி பயன்படுத்துவற்கு தொழில்நுட்ப ரீதியிலான இந்த அறிக்கையானது நிபந்தனைகளின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரர் இந்த நிபந்தனைகளை தவறாமல் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும் என்றும், நிபந்தனைகளை நிறைவேற்றாத பட்சத்தில் இந்நிலத்திற்கு பிற்காலத்தில் ஏற்படக்கூடிய எவ்வகையான பாதிப்பிற்கும் நீர்வளத்துறை எவ்வித்திலும் பொறுப்பேற்காது. |
| 19. | மேற்காணும் மனுதாரரின் நிலத்தில் அனுமதிக்கப்படும் மட்ட அளவிற்கு மண் கொட்டி உயர்த்தப்பட வேண்டியதும், மழைநீர் வடிகால்வாய் உரிய அளவில் அமைக்கப்பட வேண்டியது இன்றியமையாதது. மேலும், தற்பொழுது ஏற்பட்டுள்ள பருவகால மாற்றத்தில் ஏற்படும் மழைவெள்ள பாதிப்புகள் தவிர்க்க இயலும் என்பதால் நில வகைபாடு மாற்றம் செய்த பிறகு மனைப்பிரிவு ஒப்புதல் & வரைபட ஒப்புதல் அளிக்கும்பொழுது சம்பந்தப்பட்ட துறையோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளோ மேற்கூறிய நிபந்தனைகள் மனுதாரரால் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து அதன் பிறகு அனுமதி அளிக்கப்பட வேண்டும். |

கூடுதல் நிபந்தனைகள்

மனுதாரர் தடையின்மைச்சான்று கோரும் நிலத்திற்கு வடக்கு பகுதியில் நீஞ்சல் மடுவு செல்கிறது. இதனை எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது. மேலும் புல எண்கள்.125/2, 125/3D, 126/3A, 145/2 & 146-ன் ஊடே தாழ் மின்னழுத்த கம்பிகள் செல்கிறது. எனவே, மின்வழித் தடத்தினால் பாதிப்பு ஏற்படாவண்ணம் உரிய வழிமுறைக்ளை மின்வாரியத்திடமிருந்து பெற்று நடைமுறைபடுத்தப்பட வேண்டும்.

எனவே, செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் வட்டம், ஆத்தூர் "அ" கிராமம், நன்செய் புல எண்கள்.84/4B மற்றும் சிலவற்றின் மொத்த பரப்பு 08.09.07 ஹெக்டேர்ஸ் நிலத்திற்கு அரசாணை எண்.302 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.29.12.2010-ன் படியும் இயக்குநர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி சென்னை-02 சுற்றறிக்கை ந.க.24935/2010/ஜிஆர் நாள்.7.3.2011-ல் குறிப்பிட்டுள்ளவாறும், மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் அடிப்படையிலும் அரசு விதிகளின்படியும், தி/எ்.வாசவி ரியால்டர்ஸ் நிறுவனத்தின் பங்குதாரர் திரு.ஜெயக்குமார்,

TRUE COPY
NOTARY PUBLIC
K.S. SHANMUGAM
CITY OF CHENNAI
Go. Ms.
No.143/2023
GOVT. OF TAMILNADU, INDIA

என்பவருக்கு வீட்டுமனைப் பிரிவாக மாற்றிக்கொள்ள தடையின்மைச் சான்று வழங்கப்படுகிறது.

28-5

மாவட்ட ஆட்சித்தலைவர்,
செங்கல்பட்டு

மாவட்ட ஆட்சித் தலைவர் செங்கல்பட்டு

28/5/24

பெறுநர்,
திரு.ஜெயக்குமார்
தி/ள்.வாசவி ரியால்டர்ஸ்
6/11, மகாலிங்கம் தெரு, மகாலிங்கபுரம்,
நுங்கம்பாக்கம், சென்னை –600034.

நகல் – ஆ2 இருக்கை –இருப்பு கோப்பு

TRUE COPY

NOTARY PUBLIC
K.S. SHANMUGAM
CITY OF CHENNAI
Go. Ms.
No.143/2023
GOVT. OF TAMILNADU, INDIA

7/8/24

K.S. SHANMUGAM
ADVOCATE & NOTARY PUBLIC
EGMORE COURT ADVOCATE ASSOCIATION
EGMORE, CHENNAI-600 008.
CELL : 98413 59235